பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 03 சனிக்கிழமை 16.03.2024 கதிர் 130

## வெடுக்குநாறிமலை அடாவடியை எதிர்த்து
# இன்றும் போராட்டம்
### வவுனியாவில் அணி திரள அழைப்பு

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வுகளைப்பொலிஸார்குழப் பியதுடன் ஆலய நிர்வாகிகள் 8 பேரைக் கைது செய்தமையைக் கண்டித்து இன்றும் போராட்டம் நடத்தப்படவுள்ளது. வவுனியா கந்தசாமி கோயிலின் முன்பாக காலை 10 மணிக்கு இந்தப் போராட்டம் தொடங்கும் என்று நல்லூர் சிவகுரு ஆதீன கர்த்தா வேலன்சுவாமிகள் அறிவித்துள்ளார். இந்தப்பேரணியையொட்டி யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவிற்குவாகனப்பேரணி ஒன்றுஇடம்பெறவுள்ளதாக ☞ 2

## இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றஉறுப்பினர்களின் வயது உச்சவரம்பெல்லைச் சட்டம். இப்படியொருசட்டத்தைக்கொண்டுவர முடியுமா என்கிற கேள்வியை எழுப்பியிருக்கிறார் கட்டபேரஜோவ னோதபதி கப்பேத்தியகோக சிறி விமல தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள நான்கு முக்கியபெளத்தபீடங்களில்ஒன்றான ராமன்யபீடத்தின்தலைவரானஅவர், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர்ரொஷான்ரணசிங்கவைச் சந்தித்தபோது நாடாளுமன்றத்தின் வயோதிகத் தன்மை குறித்து அதிகம் கவலைப்பட்டார் என்று டெய்லிமிரர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றஉறுப்பினர்களாக உள்ள வயோதிபர்கள் தாமாக முன்வந்து பதவி விலகவேண்டும் இல்லையேல் அவர்களை ☞ 2

## பிணை கேட்டு மேல் நீதிமன்றை நாடினார் கெஹலிய ரம்புக்வெல

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல,கொழும்புமேல் நீதிமன்றத்தில்பிணைவிண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளார்.

தமது பிணைக் கோரிக்கை மாளிகாகந்தநீதிவானால்பலதடவைகள் நிராகரிக்கப்பட்டதாகவும், அந்த உத்தரவை இடைநிறுத்தி, ஏதாவதொரு நிபந்தனையின் அடிப்படையில் தம்மை பிணையில் விடுவிக்குமாறும் அவர் தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் சுகாதார ☞ 2

## தம் வசதிக்கு மாறி மாறி தேர்தல் வைத்தோர் இன்று முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்
### பஸிலின் கருத்துக்களைச் சாடுகிறார் ஜே.வி.பி. தலைவர்

தங்கள் வசதிக்காக மாறி மாறித் தேர்தல் நடத்தியவர்கள் எல்லாம் இப்போது ஜனநாயகம் தொடர்பில்கவலைப்படுவது முதலைக்கண்ணீருக்குச் சமம் என்று ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்கதெரிவித்தார்.

ஜனநாயகத்தைப் பாதுகாத்து சுமுகமான அதிகார மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் முதலில்நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலைநடத்துவதுதான் உத்தமம் என்று பொது ஜன பெரமுனவின் நிறுவுனரான பஸில் ராஜபக்ச தெரிவித்திருந் தார்.

அவ்வாறு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பொதுத்தேர்தலைநடத்து வது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே ஜே.வி.பி. தலைவர் மேற் கண்டவாறுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் ததாவது:

2004இல் நாடாளு மன்றத் தேர்தல் நடத்தப் பட்டு 2005 ஜனாதிபதி தேர்தல்அவர்களது ஆட்சி யில்தான் நடைபெற்றது. 2010இல் அரசமைப்பில் நான்குவருடங்கள்நிறை வடைந்ததும் நாடாளு மன்றத் ☞ 8

## நீர்தேங்கங்களின் நீர்மட்டம் வேகமாகக் குறைகின்றது
### தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த கோரிக்கை

மகாவலி மற்றும் 73 நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம்80சதவீதமாகக் குறைந்துள்ளதாக நீரியல் மற்றும் பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது.

மகாவலிநீர்த்தேக்கங் களின் நீர்மட்டம் 80 சதவீதமாகக் குறைந் துள்ளதுடன் ஏனைய பிரதான நீர்த்தேக் கங்களின் நீர்மட்டம் மழையின்மை காரண மாகக் குறைந்துள்ளது.

வெப்பமான வானிலை காரணமாக வீடுகள் மற்றும் அரச நிறுவனங்களில் தண்ணீரை மிகவும் சிக்கனமாக பயன்படுத் துமாறும் கேட்டுக்கொள் ளப் பட்டுள்ளது.

இதேவேளை, வறட்சியான வானிலை காரணமாக 4 பிரதேச செயலாளர் பிரிவுகள் குடிதண்ணீர்ப் பிரச்சினையால் ☞ 2

## மின் சக்தி அமைச்சருடன் அதானி நிறுவனம் பேச்சு
### மன்னார், பூநகரி காற்றாலைகள் குறித்து

அதானி கிறீன் எனர்ஜி நிறுவனத்தின் அதிகாரிகளுக்கும் மின்சக்தி,எரிசக்திஅமைச் சருக்கும் இடையிலான சந்திப்பு மின்சக்தி, எரிசக்தி அமைச்சில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் அதானி கிறீன் எனர்ஜி நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பா ளர்சாகர்அதானி,அதானி எனர்ஜி சொலோசன் நிறுவனத்தின் முகாமைத்துவபணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அனில் சர்தானாஆகியோர் கலந்துகொண் ☞ 8

## 2 வருடங்கள் இப்படியே சென்றால் பொருளாதாரத்தை மீட்டுவிடமுடியும்
### இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த ஆரூடம்

இரண்டுவருடங்கள் இந்த அமைப்பில் நீடிக்க முடிந்தால் வீழ்ச்சிய டைந்த பொருளாதாரத் தைக் கட்டியெழுப்ப முடியும் என்று உள்நாட் டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளை முடிவுக்குக் கொண் டுவந்து தற்போது பொரு ளாதார மற்றும் சமூக உறுதிப்பாடு உருவாக்க ப்பட்டுள்ளது. அதற்கு எமது அமைச்சும் ☞ 8

## நாட்டு வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது தேசியக் குற்றம்
### இப்படிச் சொல்கிறார் வெடருவே உபாலி தேரர்

நாட்டின்வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது தேசிய குற்றமாகும். அணிந்திருக்கும்ஆடை யை விற்றுவிட்டால் நிர்வாணம்முழுஉலகுக் கும் தெரியும் என்று அஸ்கிரி அனுநாயக்க வெடருவேஉபாலிதேரர் தெரிவித்தார்.

தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு எதிராக தேசிய பிக்குகள் அமைப்பு களனியில் ஏற்பாடுசெய்திருந்தமஹா சங்க சம்மேளனத்தில் கலந்துகொண்டுகருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்த தாவது:

எல்லாவற்றையும் அரசியல்மயமாக்காமல் சிறந்தஅரசநிர்வாகத்தை நாட்டுக்குள் ஏற்படுத் தவேண்டும். காலத் துக்குத் தேவையான மழைபெய்துவிவசாயம் செழிப்புற்றுநல்ல அறுவடையை ☞ 2

## போக்குவரத்து, எரிசக்தித் துறைகளில் இந்தியாவுடன் உறவு மேம்படவேண்டும்
### ஜனாதிபதி ரணில் அறைகூவல்

போக்குவரத்து மற்றும் எரிசக்தி ஆகிய அனைத்துத் துறை களிலும் இலங்கைக் கும் இந்தியாவுக்கும் இடையே உறவுகளை மேம்படுத்தவேண்டும், நாம்ஒருவருக்கொருவர் உதவிசெய்து முன்னேற வேண்டும்இதன்மூலம் இரு நாடுகளுக்கும் பயன் கிடைக்கும் என்றுஜனாதிபதிரணில் விக்ரமசிங்க வலியுறுத் தினார்.

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம்மற்றும்75ஆவது இந்தியகுடியரசுதினத்தை முன்னிட்டு இலங்கை இந்தியச்சங்கம்கொழும் பில் ஏற்பாடு செய்திருந்த விசேட நிகழ்வில் உரையாற்றும்போதே அவர்இதனைத்தெரிவித் தார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டிருந்தனர். இலங்கைக்கான இந்திய உயஆணையர்சந்தோஷ் ஜா விசேட விருந் தினராகக் கலந்துகொண் டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு இதன்போது விசேட நினைவுப்பரிசும் வழங் கப்பட்டது, இந்திய - இலங்கை உறவுகளின் அண்மைக்காலசிறப்பம் சங்கள் அடங்கிய 'மைத்திரி' சஞ்சிகையும் ஜனாதிபதியிடம்கையளிக் கப்பட்டது.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கும்இந்தி யாவுக்கும்இடையில்மத மற்றும்கலாச்சாரரீதியான பெரும் பிணைப்பு உள்ளது. மேலும் நமது இரு நாடுகளுக்கும் பொதுவான பாரம்பரிய மும் உள்ளது.

நானும் இந்திய பிரத மர் நரேந்திர மோடியும் கூட்டாக கைச்சாத்திட்ட தொலைநோக்கு பிரக டனம்செயற்படுத்தப்படும் நிலையில் 75ஆவது ஆண்டுநிறைவுகொண்டா டப்படுவது விசேட அம்சமாகும். ☞ 2

## இறையாண்மையைப் பாதுகாக்கும் நிலமைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்
### ரொஷான் ரணசிங்க எம்.பி. கருத்து

இலங்கையின் சுயா தீனத்தையும் இறை யாண்மையையும் பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட் டிருக்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பி னர்ரொஷான்ரணசிங்க தெரிவித்தார்.

பொலன்னறுவையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின்பின்னர் அவர்செய்தியாளர்களிடம் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் ததாவது:

சுயாதீன நாடு என்ற வகையில் நாங்கள் கையாட்களோ அல்லது பொம்மைகளோஅல்லர். உலகில் அனைத்து நாடுகளுக்கும்இருக்கும் உரிமைஎமதுநாட்டுக்கும் இருக்கிறது. என்றாலும் நாட்டின் சுயாதீனம் இறையாண்மையைத் தற்போது பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டி ருக்கிறோம்.

நாட்டை வங்குரா தேதாகுவ தற்கான காரணங்களில் ஒன்று வேறு நாடுகளுக்கு தேவையான முறை யில், அவர்களின் விருப் பங்களுக்கேற்பநாட்டை நிர்வகிப்பது.

இந்த நிலைக்கு இடமளிக்கக்கூடாது. நாட்டின்தேசியத்தன்மை, சுயாதீனத்தை பாதுகாக் கக்கூடிய ஆளும் தரப்பு ஒன்றை நியச்சயமாக கொண்டுவர வேண்டி இருக்கிறது. அதனை தற்போது அனைவரும் உணர்ந்துவருகின்றனர். கிரிக்கெட்டிலும் இதுதான் இடம்பெற்றது.

கிரிகெட்சம்பவத்துக்கு பின்னால் பெரும் கதை இருக்கிறது. விளையாட்டுத் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அந்தப் பதவிகளில் இருந்து நீக்குவதற்கான புதிய சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் வயோகித்தன்மை குறித்து அண்மைக் காலமாகவே பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. அண்மையில்தமிழ்அரசுக்கட்சியின் உட்கட்சித் தேர்தலின்போதுகூட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இது தொடர்பில் பேசியிருப்பார். தனக்கு 60 வயதாகிவிட்டதால் ஒரு தடவை மட்டுமே கட்சியின் தலைமைப் பதவியில் இருப்பார் என்றும் 60 வயதுக்குமேல்அரசியல்வாதிகளும் ஓய்வுபெறவேண்டும் என்றும் பேசியிருப்பார். அதற்கும் மேல், வயோதிபத்தால்ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் பதவி விலகுவது நல்லது என்று கருத்துத் தெரிவிக்கப்போய் சர்ச்சைகளிலும்மாட்டிக்கொண்டவர் சுமந்திரன்.

இது தொடர்பில் சில பொது அமைப்புகளும்கூட கடந்த காலங்களில் அக்கறை செலுத்தி வந்திருக்கின்றன. எனினும் இலங்கையின்மதிப்புக்குரியபௌத்த அமைப்பு ஒன்றின் பீடாதிபதி அது குறித்துக் கருத்துத் தெரிவிப்பது இதுவே முதல் தடவை. அவரது கருத்து மக்கள் மத்தியில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினர் 60 வயதுக்கும் அதிகமான வயோதிபர்கள். அதாவது 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வியோதிபர்கள். அதிலும் இன்றிருக்கும் அமைச்சரவையில் அரைவாசிப் பேர் வயோதிபர்கள். 20 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையில் 11 பேர் 70 வயதுக்கும் அதிகமானவர்கள்.

நாடாளுமன்றத்தில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட 70 உறுப்பினர்களில் 43 பேர் தமது வரலாற்றில் ஒரு தடவைகூட அமைச்சுப் பதவிகளை வகித்தவர்கள்இல்லை. எப்போதும்உறுப்பினர்களாக மட்டுமே இருந்தவர்கள். 23 பேர் ஒரேயொரு தடவை மட்டும் அமைச்சுப் பதவிகளை வகித்திருக்கிறார்கள். வயோதிபம் காரணமாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்றிறன் மங்கியிருக்கின்றது என்று மந்திரி.எல்கே என்கிற இணையத் தளம் தெரிவிக்கின்றது.

அந்த இணையத் தளம் நாடளாமன்ற உறுப்பினர்களின் நாடாளுமன்றச் செயற்பாடுகளை வைத்து அவர்களை வகைப்படுத்தியுள்ளது. அதில் முதல் 20 சதவீத உறுப்பினர்களுக்குள் ஹக்கீம், பொன்சேகா, பந்துல, பீரிஸ், வாசுதேவ, சரத் வீரசேகர, ராஜித, லக்ஸ்மன் கிரியெல்ல சாமல் ராஜபக்ச, எரான் விக்கிரமதுங்க உள்ளிட்ட 13 பேர் மட்டுமே அடங்கியிருக்கின்றனர். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர்கூட அந்த இடத்திற்குள் இல்லை. அவர்களில் பலரும் இந்த வயோதிப எல்லையை இப்போது எட்டிப்பிடித்திருக்கின்றனர் என்பதும் கவனதிற்குரியது. ஆனால் 60 வயதைக் கடந்த விக்னேஸ்வரன் போன்றவர்களுக்கும் அந்த முதல் 20 சதவீதத்துக்குள் இடமில்லை.

நாடாளுமன்றஉறுப்பினர்களில் கடைசிச் செயற்பாட்டாளர்களான 20 சதவீதம் பேரில் சம்பந்தனும் உள்ளடங்கலாக 14 பேர் வயோதிபர்களாக உள்ளனர்.

அரசபொதுத்துறைச்சேவையில் உள்ளவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதைச் சட்டங்கள் கட்டாயமாக்குகின்றன. பொதுத்துறை நிறுவனங்களில் ஓய்வு பெறும் வயது கட்டாயம் 60 என்று கடந்த வருடம்தான் ரணில் தனது இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்தார்.

அதுபோன்ற சட்டங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலும் கொண்டுவரப்படவேண்டும் என்று ராமன்ய மகாநாயக்கர் வலியுறுத்துகின்றார். அரசியல்வாதிகள் விருப்ப ஓய்வுபெறும் தற்போதைய நிலை மாற்றப்படவேண்டும் என்பதே அவரது வாதம்.

பாராளுமன்றத்தில் உள்ள வயோதிப அரசியல்வாதிகள் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எதனையும்செய்யவில்லைஎனவும் தேசிய வளங்களை விற்பனை செய்வதே மாத்திரமே அவர்களின் வேலையாக இருக்கின்றது எனவும் சிறிவிமல தேரர் சாடுகின்றார்.

அவரது கருத்துக்கள் சமூகத்தில் ஒரு சுற்று சலசலப்பை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். எனினும் இலங்கையர்களின் சராவரி வயது எல்லை 77 ஆக இருக்கும்போது, 60 வயதில் ஓய்வு பெறும் ஒருவர் அடுத்த இரண்டு தசாப்த காலத்திற்கு என்ன செய்வது என்பது தொடர்பான நியாயமான கேள்விகளும் இருக்கின்றன. எனவே அவர்கள் 60வயதுக்குப்பின்னரும்அரசியலில் ஈடுபட்டாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாவதற்கு ஒரு உச்ச வயெதல்லையை நிர்ணயிப்பது சாலச் சிறந்ததே. அது 65 அல்லது 70 வயதாகக்கூட இருக்கலாம். அது இளைஞர்கள் நாடாளுமன்றத்-துக்குள் நுழைவதற்கான வாய்ப்பையும் அதிகரிக்கும். சம்பந்தனுக்கு தற்போதைய வயது 91. அவர் இன்னொரு தடவை தேர்தலில் போட்டியிட விரும்பினால் அதனை யாராலும் தடுக்க முடியாது. அவர் வைத்தியசாலையில் படுத்திருந்தபடியேகூட நாடாளுமன்ற உறுப்பினராகக்கூடும். அத்தகைய நிலமை சிங்களவர்களுக்கும்வரவேண்டாம் என்கிற தூர நோக்கத்தினால்தான் மகாநாயக்கர் இந்தக் கருத்தை வெளியிட்டாரோ என்னவோ....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இன்றும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

வெடுக்குநாறிமலையில் மாக சிவராத்திரி அன்று கைது செய்யப்பட்ட 8 பேரில் ஐவர் தம்மை விடுவிக்கக்கோரி வவுனியா சிறைச்சாலையில்உண்ணாவிரதம் இருந்துவரும்நிலையில், அவர்களை விடுவிக்கக்கோரும் போராட்டங்கள் தீவிரம் பெற்று வருகின்றன.

வெடுக்குநாறிமலை அடாவடிகளை எதிர்த்தும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரியும் நேற்றும் நெடுங்கேணியில் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையிலானவர்கள் அதில் கலந்துகொண்டனர். ஆலய நிர்வாகத்தின் சார்பில் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. வடக்கின் பல்வேறு பகுதிகளில்இருந்தும்போராட்டத்திற்கு மக்கள் வருகை தந்திருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக இன்றும் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அநீதிக்கு எதிரான இந்தப் போராட்டத்தில், அனைத்துத் தமிழ் மக்கள், சமயம்சார்ந்தஅமைப்புக்கள், தமிழ் அரசியல்வாதிகள், தமிழ் உணர்வாளர்கள், சிவில்சமூகத்தினர், பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரையும், கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி இன்று காலை வாகனப் பேரணி ஒன்றும் செல்லவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஸ் அறிவித்துள்ளார். வவுனியாவில் நடைபெறவுள்ள போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக இருந்து காலை 7.30 மணிக்கு இந்தப் பேரணி புறப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் இருப்புக்காகக் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி கோரி நடைபெறும் இந்தப் போராட்டத்தில் அனைவரும் அணிதிரண்டு கலந்து கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்செ.கஜேந்திரன்அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்களுக்காக அவர்களது குடும்பத்தின் ஏற்பாட்டில் கந்தசாமி ஆலயத்தின் முன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்என அவர்கள்கோரிக்கை விடுத்துள்ளார்கள். அந்த வகையில் சிவில் அமைப்புக்கள், பொதுமக்கள் விரைந்து செயற்பட்டு அந்தப் போராட்டத்திற்கு வலுச் சேர்க்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும். இது அவர்களின் குடும்பத்தின்பிரச்சினை மட்டுமல்ல. ஒட்டுமொத்த இருப்பு சார்ந்த பிரச்சினை. வெடுக்குநாறி மலையில் பௌத்த கோவில் வருவது என்பது தமிழ் மக்கள் தமது இருப்பை இழக்கும் செயற்பாடு. அதற்காகக் கைதானவர்கள் ஒரு தேசத்தின் இருப்புக்காகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள். ஆகவே ஒட்டுமொத்த தேசமும் அவர்களுக்காக திரண்டு குரல் கொடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு நீதி வேண்டியும், பொலிஸாரின் அடாவடிகளைக் ண்டித்தும் இன்று வவுனியாவில் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறுகைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

## நாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதற்கு அரச பொறிமுறைகள் தர்மத்துடன் செயற்டவேண்டும். நாட்டின் பெறுமதிமிக்க வளங்களை விற்பனைசெய்து, அதனைச்செய்ய முடியாது.

நாங்கள் அணிந்திருக்கும் ஆடையை விற்பனை செய்ய முயற்சிக்கவேண்டாம்அவ்வாறுவிற்பனை செய்தால் எமது நிர்வாணம் முழு உலகுக்கும் வெளிச்சமாகும். அதனால் எமது மேலான கலாசாரத்தை பாதுகாத்துக்கொள்வதே எமக்கு முக்கியமாகும்.

நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்குவிற்பனைசெய்வதுதேசிய குற்றமாகும். இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டுஅரசநிர்வாகத்தை முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்றசெய்தியைஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

அன்று இலங்கை இந்திய ஒப்பம் செய்துகொள்ளும்போது ஜே.ஆர். போன்றஒருவர் இல்லாமல் இருந்திருந்தால் எமது நாடு பிளவுபட்டிருக்கும். நாடு பிளவுபடாத வகையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையில்சிலதடைகளை ஏற்படுத்தி இருந்தார். அதனால் ஆட்சியாளர்கள் எப்போதும் மக்கள் ஆணையின் நோக்கத்துடனே செயற்பட வேண்டும் என்றார்.

## நீர்தேங்கங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்போதே பாதிக்கப்பட்டுள்ளதாக பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வரக்காபொல, யட்டியந்தோட்டை, ருவன்வெல்லமற்றும்திவுலப்பிட்டிய ஆகிய பகுதிகளில் வாழும் 3,000 குடும்பங்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையைஎதிர்கொண்டுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் நாயகம் உதய ஹேரத் தெரிவித்தார்.

## இறையாண்மையைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறை அமைச்சராக நான் இருந்தபோது, நாட்டின் இறையாண்மை, சுயாதீனத்திற்கு பாதிப்பு இல்லாமல், வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியாமல் செயற்பட்டதாலேநான் அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டேன். என்னை அமைச்சு பதவியில் இருந்து நீக்க வெளிநாடுகள் பெரும் அழுத்தம் கொடுத்தன.

இவ்வாறு வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து எமது ஆட்சியாளர்கள் செயற்படுவார்களானால் எமது நாட்டின் சுயாதீனம், இறையாண்மையின் நிலைஎன்ன? எம்மை பிச்சைக்காரர்களாக்கி, யாருக்கும்பின்னாலும்எமக்குசெல்ல வைப்பதை அனுமதிக்க முடியாது. அதனால் நாட்டின் சுயாதீனம், இறையாண்மையை பாதுகாக்க முடியுமான ஆட்சியாளர்களையே மக்கள் இனிமேல் தெரிவு செய்யவேண்டும் என்றார்.

## பிணை கேட்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரின் இந்தப் பிணை கோரிக்கைஎதிர்வரும்திங்கட்கிழமை பரிசீலிக்கப்படவுள்ளது. தரமற்ற மருந்து விநியோகம் தொடர்பான வழக்கில் கெஹலிய ரம்புக்வெல்ல தொடர்ந்துவிளக்கமறியலில்வைக்கப் பட்டுள்ளார்.

## போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தும்'தொலைநோக்குஅறிக்கையைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க உறுதிபூண்டுள்ளோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார மற்றும் மத உறவுகள், இருநாடுகளும்ஜனநாயக நாடுகளாக இருப்பது, இரு நாடுகளுக்கும் பிரிட்டிஷ் சட்டக் கட்டமைப்பு இருப்பது போன்ற விடயங்கள் குறித்துநாங்கள்தொடர்ந்துபேசிவருகிறோம். ஆனால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவை நாம் மறந்துவிட்டோம்.

அந்த உறவு கலாச்சார உறவுகளுக்கு அப்பாற்பட்டது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மொஹஞ்சேதாரோநாகரிக காலத்திலிருந்தே இந்தியாவில் இருந்து கப்பல்கள் இலங்கைக்கு வந்ததாகக்கூறப்படுகிறது. குறிப்பாகதென்னிந்தியா மற்றும் இலங்கையில், அனுராதபுரம், தஞ்சாவூர், மதுரைமற்றும் காஞ்சிபுரம் ஆகிய நான்கு இராச்சியங்களும்தங்கள் பொருளாதார நலன்களைப் பொறுத்து ஒருவருக்கொருவர் கூட்டணிவைத்தன அல்லது ஒருவருக்கொருவர் சண்டையிட்டன.

இந்த மூன்று இந்திய இராச்சியங்களும்உலகின்கிழக்குநாடுகளை அணுகுவதற்குபலசந்தர்ப்பங்களில் திருகோணமலை துறைமுகம் ஒரு முக்கிய துறைமுகமாக மாறியது. முன்னேஸ்வரம்கோயில், மாந்தையிலுள்ளதிருக்கேதீஸ்வரம் கோயில், நகுலேஸ்வரம் கோயில், திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரம்கோயில்உள்ளிட்ட அனைத்துஆலயங்களிலும்கிடைத்த நாணயங்கள், இந்தியாவிற்கும் இலங்கைக்கும்இடையிலானவர்த்தக உறவுகளையும் இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் பற்றியும் தெளிவுபடுத்துகிறது. அனுராதபுரத்தில் பழையகிராமங்களில்மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியின்போது தென்னிந்தியவர்த்தகஅமைப்புகளால் வெளியிடப்பட்ட நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாய் மற்றும் இந்திய ரூபாயின் பாவனை தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னரே, கடந்த காலங்களில் மக்கள் வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்குப்பொதுவான நாணயத்தைப் பயன்படுத்தியதை இது காட்டுகிறது. அதற்கேற்ப, இருநாட்டுஉறவுகளைவலுப்படுத்த நாம்இப்போதுஉழைக்கவேண்டும். போக்குவரத்து மற்றும் எரிசக்தி ஆகிய அனைத்து துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையே உறவுகளைமேம்படுத்தவேண்டும்.

தென்னிந்தியாவிற்கு வசதியாக இலங்கையின் மூலோபாய அமைவிடத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்துக் கவனம் செலுத்தப்படவேண்டும். அதன்படி, தென்கிழக்காசியா மற்றும் வங்காள விரிகுடாவின் பிராந்தியங்கள் அபிவிருத்தியடைந்து வரும் நிலையில் திருகோணமலையின் மீள் அபிவிருத்தி தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வங்காள விரிகுடா பிராந்தியத்தின் மூலோபாய மதிப்பு காரணமாக, கொழும்புதுறைமுகத்தின்பயன்பாடு தற்போது மேம்பட்டு வருகிறது. இதன் ஊடாக இலங்கைக்கு எவ்வாறு பயன்களைப் பெறுவது மற்றும் இலங்கையிடம் உள்ள மேலதிக புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இந்தியாவுக்குஎவ்வாறுவழங்குவது என்பது தொடர்பில் செயற்பட்டு வருகிறோம்.

சுற்றுலாத்துறையில் கவனம் செலுத்துகையில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும், இந்தியாவுக்கு அடிக்கடி செல்லும் இலங்கையர்களும் உள்ளனர். இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதைப் போன்றே இலங்கையில் இருந்து திருப்பதி, அயோத்தி, குருவாயூர் போன்ற இடங்களுக்கு இலங்கை சுற்றுலாப் பயணிகளும் அதிகமாகச் செல்கின்றனர்.

நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால் இந்து சமுத்திரம் வளர்ச்சி அடையும் போது நமது நாடும் வளர்ச்சி அடையும். நாம் பொருளாதார ஒருங்கிணைப்பை நோக்கி நகர்ந்து வருகிறோம். ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இணைந்தபோது பின்பற்றியதை நாம் இங்கு செய்யக்கூடாது. அதிலிருந்து வெளியேறுவதாக பின்னர் அவர்கள் முடிவு செய்தனர். மேலும் இந்தியாவுடன் தடையற்ற வர்த்தகஒப்பந்தம்செய்துகொள்ளவது குறித்து இன்னும் அவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். அந்த விடயம் நடக்குமா நடக்காதா என்று தெரியவில்லை. இருப்பினும், நமக்கு இருக்கும் வாய்ப்புகளை நாம் உணர வேண்டும். இந்தியாவுடன் இணைந்துஎவ்வாறுமுன்னேறுவது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இது மிகவும் எளிதான செயல் எனலாம்.

பெங்களூரில் இருந்து ஒருவர் ராஜஸ்தானுக்கு செல்வதைவிட எளிதாகவிடுமுறைக்குஇலங்கைக்கு வரலாம். ராஜஸ்தானை அடைய இரண்டு மணி நேரம் ஆகும். ஆனால் இலங்கையை அடைய ஒரு மணிநேரம் மட்டுமே செல்லும்.

கைத்தொழில் நடவடிக்கைகளைப் போன்றே இந்த அனைத்து நடவடிக்கைகளிலும் விநியோகச் சங்கிலிகளை நிறுவுவதற்கான வாய்ப்பும் உள்ளது. இந்து சமுத்திரம் தற்போது வளர்ச்சியடைந்து வருகிறது. இந்தியா, இந்தோனேசியா, ஈரான், சவூதி அரேபியா போன்ற ஏனையநாடுகள்வேகமாகவளர்ந்து வருகின்றன.

அப்போது இந்து சமுத்திர வலயம் பொருளாதார மையமாக மாறும். அடுத்த 50, 60 ஆண்டுகளில், ஆபிரிக்க வலயமும் வளர்ச்சியடைவதால் அந்த மாற்றம் நிகழும். எனவே இந்தப் பணியை நாம்இப்போதேதொடங்கவேண்டும். இரு நாடுகளுக்கும் இடையே அரசியல் உறவுகள் உள்ளன. இந்த அனைத்துதுறைகளிலும்நமது இரு நாடுகளும் நெருக்கமாக உள்ளன. எனவே நாம் ஒருவருக்கொருவர் உதவிசெய்துமுன்னேறவேண்டும். இதன் மூலம் இரு நாடுகளுக்கும் பலன் கிடைக்கும்.

இரு நாடுகளுக்கும் இடையிலானஉறவுகளைமேலும்வலுப்படுத்தும் வகையில் கடந்த வருடத்தில் முன்னெடுத்த வேலைத் திட்டத்திற்காகஇலங்கை-இந்தியச்சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கின்றேன். மேலும் நாம் வெளியிட்டிருக்கும் இந்த 'தொலைநோக்கு' அறிக்கை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்என்று எதிர்பார்க்கிறேன் - என ஜனாதிபதி தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# வெடுக்குநாறிமலையில் கைதானோர் உறவுகளால் மனிதவுரிமை ஆணைக்குழு அலுவலகம் முற்றுகை





வெடுக்குநாறி மலை ஆலயத்தில் வைத்து கைதான ஆலய பூசகர் உள்ளிட்ட 8 பேரில் 5 பேர் தொடர்ந்தும் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், மனித உரிமைகள் ஆணைக்குழு இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவித்துபாதிக்கப்பட்டவர்களின்உறவினர்கள் வவுனியா மனிதவுரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

இதன்போது, தமக்கான நீதியை வலியுறுத்தி ஆலய பூசகர் உள்ளிட்ட 5 பேர் நேற்றும் 4 ஆவது நாளாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இதன் காரணமாக அவர்களது உடல்நிலை தொடர்பாக இதுவரையில் எந்தவித செயற்பாடுகளையும் மனித உரிமை ஆணைக்குழு மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தனர்.

இதன்போது, மனிதவுரிமைக் ஆணைக்குழுவினர் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன், அவர்களிடம் இருந்து முறைப்பாடுகளையும் பெற்றுக்கொண்டனர். அத்துடன் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலைக்கு சென்று பார்வையிடுவதாகவும் இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட உறவினர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் மனிதவுரிமை ஆணைக்குழு அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05-100)



# கணக்காய்வுக்கு உட்படுத்தி உரிய விசாரணை வேண்டும்

## விவசாயிகள் ஒப்பமிட்டு மனு

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான பெரும் போக மற்றும் சிறுபோக செய்கைகளின் போது விவசாயிகளிடமிருந்து அறவிடப்படும் பெருந்தொகையான நிதி நிதி நியம சட்டங்களுக்கு அமைய வங்கிகளில் வைப்பிடப்படாது முறையற்ற விதத்தில் செலவிடப்படுகின்றமை தொடர்பில் கணக்காய்வுக்கு உட்படுத்தி உரிய விசாரணை மேற்கொள்ளுமாறு தேசிய கணக்காய்வு திணைக்களத்திற்கு விவசாயிகள் கையொப்பமிட்ட மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழான பெரும் போகம் மற்றும் சிறுபோக செய்கைகளின் போது நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளின் முழுமையான ஆதரவுடன் விவசாயிகளிடமிருந்து பல மில்லியன் ரூபா நிதி ஒவ்வொரு போகத்தின் போதும் அறவிடப்பட்டு வருகின்றன.

அதாவது கடந்த பெரும் போகத்தின்போது ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் இருபத்திஓராயிரம் ஏக்கருக்குரிய நிதி அறவிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு சிறுபோகத்தின் போது ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா 13 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்புக்கான நிதி அறவிடப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த 2012 ஆம் ஆண்டு மற்றும் 2011 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளிலும் ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா வீதம் நிதி அறவிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு போகத்திலும் விவசாயிகளிடம் இருந்து அறவிடப்படுகின்ற நிதி, அரச திணைக்களங்கள் மற்றும் அமைப்புக்கள் பின்பற்ற வேண்டிய நிதி நியமங்களின் படி உரிய முறையில் வங்கிகளில் வைப்பு செய்யப்பட்டு விடுவிக்கப்படாமல் நேரடியாக வாய்க்கால் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் என்பவற்றக்கு மதிப்பீடுகள் இன்றியும் உரிய கேள்வி கோரல்கள் இன்றியும் நீர்ப்பாசனத் திணைக் கள அதிகாரிகளால் விவசாய அமைப்புகளைப் பயன்படுத்தி மேற்படி நிதி முறையற்ற விதத்தில் செலவிடப்பட்டு வருகின்றது.

இதனை விட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் பிரிவு 60 இன் பிரகாரம் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக பதிவு செய்யப்படாத அமைப்பு ஒன்றுக்கான நிதியைச் சேகரிப்பதற்கு பயிர் செய்கைக் கூட்டங்களில் மாவட்ட உயர்நிலை அதிகாரிகள் அனுமதிகளை அதன் மூலம் திரட்டப்பட்ட சுமார் 4.5 மில்லியன் ரூபா நிதியும் வங்கிகளில்வைப்பில்இடப்படாமலும் உரிய கணக்கறிக்கைகள் பேணப்படாமலும் கணக்காய்வுகளுக்கு உட்படுத்தப்படாமலும் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக பல்வேறு தனிப்பட்ட தேவைகளுக்காகவும் களியாட்ட நிகழ்வுகளுக்காகவும் செலவிடப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் விவசாயிகளிடம் இருந்து முறையற்ற விதத்தில் நிதி சேகரித்தல் மற்றும் செலவு செய்தல் என்பவற்றை உரிய முறையில் கணக்காய்வு செய்து கொள்ளுமாறு தேசிய கணக்காய்வு திணைக்களத்திற்கு விவசாயிகள் கையொப்பமிட்ட முறைப்பாட்டுக் கடித்தை அனுப்பியுள்ளனர்.

அத்துடன் வடக்கு மாகாண கணக்காய்வு திணைக்களம் உள்ளிட்ட வற்றுக்கும் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (05-55)

# தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் மாணவர் ஏறபாட்டில் இப்தார் நிகழ்வு

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீட முதலாம் வருட மாணவர்கள் (2021ஃ2022) ஏற்பாடுசெய்திருந்த புனித ரமழான் இப்தார் நிகழ்வு வியாழக்கிழமை பீடத்தின் முற்றிலில் இடம்பெற்றது.

கலை கலாசார பீட முதலாம் வருடமாணவர்கள்பங்குகொண்ட இந்நகழ்வில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், சிரேஷ்ட பதிவாளர் எம்.ரீ. அஷ்ஹர் உள்ளிட்டவர்களுடன் திணைக்கள தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர். (05)



# கொழும்பு மருதானை சென் ஜோசப்பை வென்றது யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி!




யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு மருதானை சென் ஜோசப் கல்லூரிக்கும் இடையிலான மூன்றாம் இடத்துக்கான காற்பந்தாட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை காலை கொழும்பு சுகதாஸ விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 05 : 02 என்ற கோல் கணக்கில் மருதானை சென் ஜோசப் கல்லூரியை வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இந்தப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜெருஷன் :3 கோல்களையும், ஷாம் மற்றும் ஸ்மித் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## டிஜிட்டல் இலங்கையில் நிலை

இலங்கை டிஜிட்டல் மயமாகவேண்டும், பொருளாதார அபிவிருத்திக்கு இலங்கையை டிஜிட்டல் மயமாக்கவேண்டும் என்றெல்லாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மைக் காலமாக பெருமெடுப்பில் அறைகூவல் விடுத்து வந்தாலும் மக்கள் அது குறித்து அதிகம் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. டிஜிட்டல் இந்தியா திட்டத்தை முன்னோடியாகக் கொண்டுதான் ரணில் டிஜிட்டல் இலங்கையை –முன்மொழிகின்றார். ஆனால் அவரது இந்தக் கருத்தைச் செவிமடுப்பதில் இலங்கையர்கள் மெத்தனமாகவே இருக்கின்றார்கள் என்கின்றன ஆய்வுகள்.

இலங்கையில் கடன் அட்டைகள் (டெபிட் காட்) பெரும் எண்ணிக்கையில் விநியோகிக்கப்பட்டிருக்கின்றபோதும் அவற்றின் பயன்பாட்டு அளவு மிக மிகக் குறைவு என்கின்றன ஆய்வுகள். அதுபோன்றே அலைபேசிகள் (மொபைல்) பயன்பாடும் மிகப் பரவலாக இருக்கின்றபோதும் அவற்றின் ஊடான பணப் பரிவத்தனை மிக மிகச் சொற்பம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கடனட்டைகள் மற்றும் அலைபேசிகள் ஊடாகப் பணமில்லா பரிவர்த்தனைகளை மேற்கொள்வதில் இலங்கையர்களிடம் தொடர்ச்சியான தயக்கம் இருக்கின்றது என்று தொழில் வல்லுநர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். டிஜிட்டல் பணக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான மக்களின் நம்பிக்கையை அதிகரிக்க ஒருங்கிணைந்த முயற்சிகளின் அவசியத்தை இது குறிப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

மாஸ்டர்கார்ட் இலங்கையின் பணிப்பாளர் மஹேஷா அமரசூரிய, கடந்த ஆண்டு செப்டெம்பர் வரையில் 111,205 டெர்மினல்களை நாடு பெருமையாகக் கொண்டிருந்த போதிலும், சராசரியாக ஒரு நாளைக்கு ஐந்துக்கும் குறைவான பரிவர்த்தனைகளே ஊனலிஷ்ஜமி லிசூஷ் நீழியிள (ஊனநுறீ) டெர்மினல்களில் நடத்தப்படுவதாகத் தெரிவித்தார். இதேபோல், கியூ.ஆர். வணிகர்கள் ஒரு நிதியாண்டின் காலாண்டில் ஐந்துக்கும் குறைவான பரிவர்த்தனைகளை பதிவு செய்கிறார்கள். 18.3 மில்லியன் கடனட்டைகள் புழக்கத்தில் இருந்தாலும், ஆண்டு முழுவதும் ஒரு அட்டைக்கான பரிவர்த்தனைகளின் சராசரி எண்ணிக்கை வெறும் ஆறு மட்டுமே.

பணமில்லாத கொடுப்பனவு முறைகளை விரிவுபடுத்துவதற்கு, பணம் செலுத்தும் வலையமைப்புகள், நிதி நிறுவனங்கள், ஃபின்டெக் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கிடையில் ஒத்துழைக்க வேண்டியதன் அவசியத்தை அமரசூரிய வலியுறுத்தினார். டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் சூழலை வளர்ப்பது அனைத்து பங்குதாரர்களுக்கும் பயனளிக்கும் என்று அவர் வலியுறுத்தினார்.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் சாந்த பெர்னாண்டோ, வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய வங்கிகள் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன் தங்களை இணைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

இலங்கையில் அதிக அலைபேசிகள் பயன்பாட்டில் உள்ளதை ஒப்புக்கொண்ட பேராசிரியர் பெர்னாண்டோ, புதிய தொழில்நுட்பங்களைஏற்றுக்கொள்வதுமக்கள்தொகையின் சதவீதத்தில் குறைவாகவே உள்ளது என்பதையும் குறிப்பிட்டார். டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் ஜெனரல் இசட் தனிநபர்களிடையே அதிகரித்து வரும் ஆர்வத்தை அவர் எடுத்துரைத்தார், நுகர்வோர் நடத்தையில் இந்த மாற்றத்திற்கு முன்கூட்டியே தயாராகுமாறு வங்கிகளிடம் அவர் வலியுறுத்துகின்றார்.

இருப்பினும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்ற வேகத்தில் இந்த விடயத்தில் மக்களிடம் மாற்றங்களை எதிர்பார்க்க முடியுமா என்கிற சந்தேகம் ஏற்ப–டுகின்றது. அப்படி அந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும், பொருளாதார மீட்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும் டிஜிட்டல் இலங்கையாக மாறுவது அத்தியாவசியம் என்றால் அதற்கான பணிகளையும் ஊக்குவிப்புக்களையும் ஆட்சியாளர்கள் இன்னும் தீவிரப்படுத்த வேண்டும்.

# பாலியல் குற்றங்களில் ஆணாதிக்க சிந்தனைத் தாக்கம்

**தருமி**

அண்மையில் தலை மன்னாரில் 10 வயதுச் சிறுமி ஒருத்தி பாலியல் வன்கொடுமையின் பின்னர் கொல்லப்பட்டார். இது மன்னாரில் மட்டுமல்ல வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அந்தக் குற்றத்தைச் செய்தவரைக் கைது செய்து உடனடியாகத் தண்டிக்கவேண்டும் என்று சிறு ஆர்ப்பாட்டங்களும் மன்னாரில் நடந்தன. பொலிஸார் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர் வசித்த தென்னந் தோப்புக்குள் இருந்து சிறுமியின் சடலம் மீட்கப்பட்டதும் அதற்கு முதல் நாள் இரவில் அந்தப் பெண் குழந்தை கடைக்குச் சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோது அதன் பின்னால் சந்தேகநபரும் சென்றார் என்பதற்கான காணொலிப் பதிவு இருந்ததும் அந்தக் கைதுக்கான காரணங்கள். இவை தவிர அறிவியல் ரீதியான ஆதாரங்கள் இதுவரையில் முன்வைக்கப்படவில்லை. அதற்கு இன்னும் கொஞ்சம் காலம் செல்லலாம்.

ஆணால், பெண்கள், பெண் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த பெரும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கும் இது போன்ற சம்பவங்கள் வெறும் ஒரு தனிச் சம்பவம் அல்ல. சமீபகாலமாக அதிகரித்து வரும் பாலியல் குற்றச்செயல்களின் தொடர்ச்சிதான். இருப்பினும் அவற்றின் மீதான கவனக் குவிப்பு என்பது காலத்திற்கும் சம்பவங்களிற்கும் ஏற்ப மாறுபடுகின்றது. யாழ்ப்பாணத்தில் வித்தியா கூட்டுப் பாலியல் வன்புணர்வுக் கொலை இலங்கை முழுவதும் ஏற்படுத்திய அதிர்ச்சியும் எதிர்ப்பும் மன்னார் சிறுமி விடயத்தில் ஏற்படவில்லை. இதுபோன்ற சம்பவங்களில் அவ்வப்போது மக்களிடையே சீற்றம் ஏற்படுகிறது. பின்னர் அடங்கிப் போகிறது. ஆனால் குற்றங்கள் தளராது தொடர்கின்றன.

சமூகத்தில் பெண் குழந்தைகள், பெண்கள் சமமற்ற முறையில் நடத்தப்படும் விதமும் இது போன்ற வன்முறைகளின் அதிகரிப்புக்குக் காரணமாக இருக்கின்றன. மன்னார் சிறுமியின் குடும்பத்துக்கு ஆதரவு தெரிவிக்கத் திரண்ட மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவானது. அது ஒரு பின் தங்கிய பகுதி என்பதனாலோ என்னவோ வடக்கு கிழக்கில் உள்ள மற்றைய பெரு நகரங்களின் கவனத்தை அந்த வன்முறை பெருமளவில் ஈர்க்கவில்லை.

இலங்கை முழுவதும் பெண் குழந்தைகள் மீதும் பெண்கள் மீதும் அன்றாடம் நடக்கும் பல வன்முறைத் தாக்குதல்கள் பதிவாகாமல் அல்லது கொலையில் முடிவடையாமல் இருந்தாலும், உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் அவர்களைப் பாதிக்கின்றன என்பதுதான் நிதர்சனம்.

வடக்கு கிழக்கில் போருக்குப் பின்னர், குறிப்பாக விடுதலைப்புலிகள் களத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் போதைப்பொருள், மது ஆகியவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளது. அதனால் பெண் குழந்தைகள், பெண்கள் மீது கட்டவிழ்த்துவிடும் வன்முறைகளும் அதிகரித்துள்ளன. போதை வெறியேறிய நிலையில் இத்தகைய கொடூரங்களில் ஈடுபடுபவர்களைப் புரிந்துகொள்ள முயற்சிப்பதும், மனிதர்களின் மூர்க்கத்தனத்தின் பின்னணியில் உள்ள காரணங்களைக் கண்டறிய முற்படுவதிலும் மக்கள் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கவென எம்மிடம் தனியான சட்டங்கள் எதுவும் இல்லை. அண்டை நாடான இந்தியா இது விடயத்தில் பலபடிகள் முன்னேறி இருக்கின்றது. அங்கு பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கான போக்சோ சட்டம், 2012ஆம் ஆண்டே கொண்டுவரப்பட்டுவிட்டது. அந்தச் சட்டம் பாதிக்கப்படும் பெண் குழந்தைகளுக்குச் சட்டப் பாதுகாப்பை வழங்குவதுடன் குற்றவாளிகளை உடனடியாகத் தண்டிக்கவும் வழிவகுக்கின்றது. பாதிக்கப்பட்ட பெண் பிள்ளை சந்தேகநபரை அடையாளம் காட்டும்பட்சத்தில் வேறு எந்தவொரு சாட்சியமும் இன்றியே, சிறுமியிடம் நடத்தும் விசாரணையில் நீதிபதிக்கு நம்பிக்கை பிறந்துவிட்டால் அவர் சந்தேகநபரைக் குற்றவாளியாக அடையாளம் கண்டு தண்டிக்க இந்தச் சட்டம் அனுமதி வழங்குகின்றது. இதுபோன்ற கடுமையான சட்டங்கள் குற்றங்கள் குறைவதற்கு உதவக்கூடியன.

இத்தகைய சட்டங்களால் பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் கொடுமைகளை முற்றாக ஒழிக்க முடியாது என்றாலும் குற்றவாளிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தி பாலியல் வன்முறையைத் தடுக்க அது நிச்சயம் உதவும். அப்படிப்பட்ட சட்டத்தை இலங்கையிலும் உருவாக்குவது குறித்து எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அக்கறை செலுத்தவேண்டும்.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள், சட்டங்கள் இங்கு உள்ளன, இது வன்முறையில் ஈடுபடுபவர்கள் நீதிமுறையின் முன் நிறுத்தப்பட சட்டரீதியான மற்றொரு வழி. ஆனால் இந்தச் சட்ட விதிகள் இருந்தபோதிலும், பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் அதிகமாகவே நடைபெறுகின்றன. அதற்கு அந்தச் சட்டங்கள் இன்னும் கடுமையாக்கப்படுவது தேவையாக உள்ளது.

இந்த வன்முறைகளின் இடைவிடாத தொடர்ச்சி எங்கிருந்து வருகிறது என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். இதற்குப் போதைப்பொருள்கள் மட்டும்தான் காரணமா அல்லது வேறு ஏதேனும் அடிப்படைக் காரணங்கள் உள்ளனவா?

போதைப்பொருள் பழக்கம் மக்களின் கோபத்தை மையப்படுத்தக்கூடிய ஒரு முதன்மைப் பிரச்சினையாக இருந்தாலும், குடிமக்களாகிய நாம் அதற்கு அப்பால் சென்று எப்போதும் தவிர்க்கப்படக்கூடிய அடிப்படைக் கேள்விகளைக் கேட்க வேண்டும். அடிப்படையில், ஆணாதிக்க மனநிலையில் எப்படி இத்தகைய வன்முறை உருவாகிறது, ஏன் வன்முறையைச் செயல்படுத்துகிறது என்பதைத் தீவிரமாக ஆய்வு செய்வது அவசியம்.

சமூகத்தில் நடைமுறையில் உள்ள பாலின விதிமுறைகள் ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்புகள் ஆகும். சமூக ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட பாலின விதிமுறைகளுக்கும் பெண் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கும் இடையிலான உறவை நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது.

பெண் குழந்தைகளையும் பெண்களையும் ஆண்களைவிடக் கீழானவர்களாக நடத்தும் மனநிலை எங்கிருந்து தோன்றுகிறது? அவர்களைப் பாலியல் இச்சைப் பொருளாகக் கருதும் மனநிலை எங்கிருந்து வருகிறது? இதுபோன்ற சங்கடமான கேள்விகளை நம்மை நாமே கேட்கவும் பதிலளிக்கவும் தொடங்கவேண்டும். மேலும், ஆணாதிக்கச் சமூகத்தில் ஆண்மையின் அடையாளம் எப்படி உருவாகிறது, எப்படி வலுப்படுத்தப்படுகிறது என்பதை நாம் மறுபரிசீலனை செய்யவேண்டும்.

ஆண்மை அடையாளத்தை உருவாக்குவதில் இளமைப் பருவம் முக்கியமானது என்பதால், நம் மறுகட்டமைப்பை அங்கேயே தொடங்கியாகவேண்டும். பாடசாலைகள், கல்லூரிகளில் சிறுமிகளுடன் எப்படிப் பழகுவது, அவர்களை எப்படி நோக்குவது என்பது ஆண் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கப்படவேண்டும். குறிப்பாக முன்பள்ளிக் கல்வியில் இருந்தே இது தொடங்கப்படவேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் ஆண், பெண் பாகுபாட்டை குறிப்புணர்த்தும் ஆடைத் தெரிவை முதலில் நீக்கவேண்டும். பெண் பிள்ளைகளுடன் வகுப்பிலும் வகுப்புக்கு வெளியிலும் எப்படிப் பழகவேண்டும் என்பது ஆண் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கபடவேண்டும்.

இதுபோன்ற அடிப்படை மாற்றங்கள் பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் கையாள்வதில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும். அதேநேரத்தில் சமூக அளவில், வெவ்வேறு களங்களில் ஆண் அடையாளத்தை எவ்வாறு கட்டமைக்கிறோம் என்பதை மறுபரிசீலனை செய்தாகவேண்டும். கூடவே பொழுதுபோக்கு, விளையாட்டு, கல்வி, அரசியல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பாலினச் சமத்துவம் குறித்த புரிதலை உருவாக்க முயலவேண்டும்.

பெண் குழந்தைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான பரந்த கொள்கைக் கட்டமைப்பை அரசு முனைப்புடன் பரிசீலிக்கவேண்டும். ஏனெனில், பெண்களின் திறன்களை மேம்படுத்த ஆட்சியாளர்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளையும், இதுபோன்ற பாலியல் குற்றங்கள் மோசமாகப் பாதிக்கின்றன.

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்துவைக்கும் பெண்களை முடக்குகின்றன. ஆணாதிக்கச் சிந்தனையைத் தகர்த்து பாலினச் சமத்துவத்தை நிலைநாட்ட ஆட்சியாளர்கள் எடுக்கும் முயற்சிகளுக்குச் சமூகத்தின் அனைத்துத் தளங்களிலிருந்தும் ஆதரவு பெருகவேண்டும். அதுவே பாலியல் குற்றங்களைக் குறைக்க, முடிந்தால் அகற்ற வழிவகுக்கும்.

# ஏமாற்றப்படும் விவசாயிகள்

## விவசாய சம்மேளன ஒன்றிய ஊடகப் பேச்சாளர் வேதனை



(ஹஸ்பர் ஏ.எச்)

நெற் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் அரசாங்கத்தால்தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக்கொண்டே வருகிறார்களெனகிண்ணியா விவசாய சம்மேளன ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் எம்.எம்.மஹ்தி தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துக்களைத் தெரிவித்த அவர் -

அரசானது 7 மாவட்டங்களில் இருந்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்வதற்காகதற்போதுநிதியைஒதுக்கி மனுக்களை கோரியிருக்கின்றார்கள்.

ஆனால் தற்போது எந்த விவசாயிகளிடமுமே நெல் இல்லை. அறுவடை ஆரம்பிக்கின்ற போது நெல் கொள்வனவு செய்வதற்கு பதிலாக அறுவடை செய்யப்பட்ட அனைத்து நெல்லும் கறுப்பு சந்தையில் அநியாய விலைக்குதனியாருக்குவிற்று தீர்ந்த பிறகு கொள்வனவு செய்வதற்கு அரசு முன் வந்துள்ளது.

கடன்பட்டு விவசாயத்தைச் செய்கின்ற விவசாயிகள் அறுவடையின்போதுஎன்ன விலை என்றாலும் நெல்லை விற்று கடன்களை அடைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் விவசாயிகள் காணப்படுகின்றார்கள்.

சேதனப் பசளை என்று அனைத்து விவசாயிகளையும் விவசாயத்தையும் முழுமையாக சேதம் செய்தார்கள். பயிர்ச் செய்கை ஆரம்பிக்க முன் பாவிக்க வேண்டிய பசளைக்கு உர மானியம் என்று மிகசிறிய தொகையை அறுவடையின் போது வழங்குகின்றார்கள்.அறுவடை செய்யும்போது கொள்வனவு செய்ய வேண்டிய நெல்லை விவசாயிகளிடம் நெல் இல்லாத போது அதற்கான பணத்தை ஒதுக்குகிறார்கள்.

இவ்வாறே தொடர்ந்தும் படம் காட்டப்பட்டு ஏமாற்றப்படுகின்ற போது எவ்வாறு விவசாயகளால் மீள முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(05)

# மட்டு. இறால் பண்ணையாளர்களுக்கு கிழக்கு ஆளுநரால் காணி ஒதுக்கீடு



(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணத்தின் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் விவசாயிகளின் சிறிய அளவிலான இறால் பண்ணை திட்டங்களுக்கான காணிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒதுக்கீடு செய்தார்.

மண்முனை தென்மேற்கு பிரதேசசெயலகம் பட்டிப்பளையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்இராஜாங்கஅமைச்சர்சதாசிவம்வியாழேந்திரனும்கலந்துகொண்டார்.

இதன்போது பயனாளிகளுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டன. (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மீனுக்கு நிர்ணய விலையுடன் கொள்கைத் திட்டம் அவசியம்

## பல நாள் படகு உரிமையாளர்கள் கோரிக்கை



மீன் ஏற்றுமதியாளர்கள் தங்களது உற்பத்திகளுக்கு நியாயமான நிர்ணய விலையொன்றைவகுத்துஅதனைசெயற்படுத்த வேண்டுமெனவும்அத்துடன்இதற்காகதேசிய கொள்கைத திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமெனவும் பலநாள்மீன்பிடிப் படகு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடற்றொழில் அமைச்சில் புதன்கிழமை கடற்றொழில்அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தலைமையில்இடம்பெற்றகலந்துஷ்யாடலின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு -

எரிபொருள் விலையேற்றம், ஐஸ் விலை அதிகரிப்பு, கடற்றொழில் உபகரணங்களின் விலை அதிகரிப்பு, வற் விரி விதிப்பு மற்றும் இடைத் தரகர்களின் தலையீடு காரணமாகத் தாங்கள்கடுமையாகபாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் தங்களால் பிடிக்கப்படும்

டூனா மீன்களுக்கு ஆகக் குறைந்தது கிலோ ஒன்றுக்கு 2000 ரூபா விலை நிர்ணயிக்கப்படுவதுடன் இதன் பொருட்டு தேசியக் கொள்கையொன்று வகுக்கப்படவேண்டுமெனவும்தெரிவித்தனர்.

அத்துடன் எரிபொருளுக்காக விதிக்கப்படும் வற் வரியை திரும்பப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் திட்டங்கள் வகுக்கக்படவேண்டுமெனவும் அதற்காக ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஆழ்கடல் மீனவர்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றுஏற்படுத்தப்படவேண்டுமென

சுட்டிக்காட்டியதுடன் தற்போதைய சூழ்நிலையில் நூற்றுக் கணக்கான ஆழ்கடல் மீன்பிடிப்படகுகள் கடலுக்கு செல்வதில்லையெனவும்இதேநிலை தொடர்ந்தால்இத்தொழிலைக்கைவிட வேண்டிய நிலையேற்படுமெனவும் தெரிவித்தனர்.

இதனைத் தொடரந்து மீன் ஏற்றுமதியாளர்கள் தமது தரப்பில் தெரிவித்தவை வருமாறு -

டூனா மீன் ஏற்றுமதி தொழில் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றது. மாலைதீவு மற்றும் இந்தியா போன்ற நாடுகள் தற்போது மீன்களை ஏற்றுமதி செய்கின்றன. அதனால் எமது மீனுக்கான கேள்வி குறைந்து விட்டதுடன் விலையும் குறைந்து விட்டது. அத்துடன் அனுபவமில்லாதவர்களும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருவதால்

இந்தத்தொழில்வீழ்ச்சியடைந்து வருகிறது.எமதுதொழிற்சாலைகளை மூட வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். எரிபொருள் விலை உயர்வு, ஐஸ் விலை அதிகரிப்பு, மின் கட்டணம் அதிகரிப்பு, டொலரின் பெறுமதி வீழ்ச்சி, விமான நிலைய தாமதக் கட்டணம் அதிகரிப்பு போன்றவற்றால் நாங்களும் பதிக்கப்பட்டுள்ளோம்;.

நூற்றுக்கணக்கானஏற்றுமதிக்கம்பனிகள் இருந்தாலும் சில கம்பனிகள் மாத்திரமே செயற்படுகின்றன - என்று தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் தமதுரைஷ்யில் தெரிவித்தவை வருமாறு -

ஆழ்கடல்மீன்பிடிபடகுஉரிமையாளர்கள் மற்றும் மீன் ஏற்றுமதியாளர்கள் ஆகிய இரண்டு தரப்பாலும் முன் வைக்கப்பட்ட விடயங்களில் உள்ள நியாயங்கள் எனக்கு புரிகிறது. இவ்விடயம் தொடர்பாக இலங்கை முதலீட்டுச் சபை, உள்நாட்டு இறைவரித்

திணைக்களம் உள்ளிட்ட துறைசார்ந்த அதிகாரிகளுடன் பேசி நியாயமான முடிவு எட்டப்பட வேண்டும். மீனவர்களும் ஏற்றுமதியாளர்களுக்குத் தரமான மீன்களை

விநியோகிக்கும் அதேவேளை ஏற்றுமதியாளர்களும் மீனவர்களிடமிருந்து நியாயமான விலையில் மீன்களை கொள்வனவு செய்யவேண்டும். முடிந்த வரையில் அவர்களிடமிருந்தே மீன்களை கொள்வனவு செய்ய வேண்டும்.

அத்துடன் செயலற்ற நிலையிலுள்ள மீன் ஏற்றுமதி கம்பனிகளின் அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்வது தொடர்பில் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இந் நிகழ்வில் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி நயனா குமாரி சோமரத்ன, இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி அனுஸா கோகுல, திணக்களப் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

## தம் வசதிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலொன்றுக்காகச் செல்கின்ற இயலுமை இருந்தது. ஆனால் அவர் முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினார்.

அதே பஸில் உள்ளிட்டவர்கள்தான் 2015இல் நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தனர்.

2019இல் ஜனாதிபதி தேர்தலின் பின்னரே பொதுத் தேர்தல் நடைபெற்றது. கோட்டாபயவுக்கு அதிகாரம் கிடைத்த பின்னர்தான் நாடாளுமன்றத் தேர்தலுக்காக நாடாளுமன்றத்தினைக் கலைத்தார்கள்.

இவ்வாறு தங்களின் வசதிக்காக மாறிமாறி தேர்தலை நடத்தியவர்கள் தற்போது ஜனநாயகம் தொடர்பில் கவலைப்படுவதானது வெறுமனே முதலைக்கண்ணீர் வடிப்பதற்கு சமனாகும் - என்றார்.

## 2 வருடங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறையப் பங்களித்துள்ளது.

மாவட்ட அளவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்குக் குழுக்களை உருவாக்க நாங்கள் உழைத்தோம். வறுமையில் வாடும் 20 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும வழங்கத் தேவையான பங்களிப்புச் செய்யப்பட்டது. தற்போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கிராமப்புற வளர்ச்சிக்கு புத்துயிர் அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெற்றிடமாகவுள்ள 2002 கிராம சேவைப் பிரிவுகளுக்கு கிராம சேவை உத்தியோகத்தர்களைப் பணிக்கமர்த்த மார்ச் 13 முதல் 15 வரை நேர்முகத் தேர்வு நடைபெற்றது. இதன் மூலம் அவசியமான கிராம சேவை உத்தியோகத்தர்களை வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அத்துடன், கிராம சேவை உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று (14) பிரதியமைச்சர் தினேஷ் குணவர்தன உத்தியோகத்தர்களின் தொழில்சார் சங்கங்களுடன் கலந்துரையாடினார். அங்கு பயணச் செலவுகள் உட்படப் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் அவர்களின் முன்மொழிவை முன்வைத்தனர். அது குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை ஏற்கனவே நாம் சமர்ப்பித்துள்ளோம்.

அத்துடன் கிராம சேவை உத்தியோகத்தர்களின் பிரதான பிரச்சினையான கிராம அதிகாரிகள் யாப்பு உருவாக்கப்பட்டு அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பின்னர், மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இருப்பினும், இந்தப் பிரச்சினையில் விரைவில் சாதகமான முடிவை எதிர்பார்க்கலாம். மேலும், பொருளாதார மற்றும் பிற நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து, மக்களின் வாழ்க்கையை மீட்டெடுத்து, சமூகத்தில் உள்ள பிளவை மீண்டும் ஒன்றிணைப்பது நமது கடமையாகவும் பொறுப்பாகவும் இருந்தது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்பினார். எனவே இன்னும் இரண்டு வருடங்கள் இந்த அமைப்பில் நீடிக்க முடிந்தால் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதன் மூலமும் அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் திட்டங்களை நிறுத்துவதன் மூலமும் சிறந்த நாட்டை உருவாக்க முடியும் என்றார்.

## மின் சக்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனர். மன்னாரிலும் கிளிநொச்சியின் பூநகரியிலும் அமைக்கப்படவுள்ள 484 மெகாவாற் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்கான மின்சார கொள்முதல் ஒப்பந்தம் தொடர்பான பேச்சில் பங்கேற்பதற்காகவே அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

மன்னார் காற்றாலை மின் திட்டத்திலிருந்து 250 மெகாவாற் மின்சாரத்தையும் பூநகரி திட்டத்திலிருந்து 234 மெகாவாற் மின்சாரத்தையும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# வீட்டின் பொருளாதார வளர்ச்சிப்படிநிலையே தேசிய பொருளாதாரத்தில் மாற்றத்தை தரும்

## அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் தெரிவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

வீட்டுச்சூழலில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் போதே தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய முடியும் என அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் வி.ஜெகதீசன் தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் இழப்பீடுகளுக்கான அலுவலகம் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து 'நம்பிக்கைக்கான நூல்' மற்றும் 'வாழ்க்கைக்கான வெளிச்சம்' திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்த வாழ்வாதார அபிவிருத்தி உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

பிரதேசசெயலாளர் ஆர். ராகுலநாயகியின் வழிகாட்டலுக்கு அமைய உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய மேலதிக அரசாங்க அதிபர் -

முயற்சி இல்லாமல் நாம் எதிலும் வெற்றி பெற முடியாது. எப்போதும் அரசாங்கத்தை நம்பி, அரசாங்கம் நிவாரணம் வழங்கும் என எதிர்பார்த்திருப்பதில் இருந்து பொதுமக்கள் மாற வேண்டும். நாடு பின்தங்கியதற்கு காரணம் இங்கு பொதுமக்களுக்கு பல்வேறு உதவிகள் இலவசமாக வழங்கப்படுவதாகும். சாதாரணமாக ஒரு குழந்தை கருத் தரித்தது முதல் அந்த குழந்தை வளர்ந்து முதியவராகி மரணிக்கும் வரை பல்வேறு இலவச நிவாரணங்களை அரசாங்கம் வழங்கி வருகிறது.

வீட்டு சூழலில் பொருளாதார அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டும். வீட்டு சூழலில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் போதே நாட்டின் தேசிய பொருளாதாரத்தில் வளர்ச்சியையும் மாற்றத்தையும் ஏற்படுத்த முடியும். இன்று சகல பொருள்களுக்கும் விலையேற்றம் என்று நாம் பேசிக் கொள்கிறோம். ஆனால் வீட்டுச் சூழலில் நமது பொருளாதார வளர்ச்சி என்ன மாற்றத்தை கண்டுள்ளது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

வீட்டில் இருக்கும் ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் நாம் வீட்டுச் சூழலில் பொருளாதார வளர்ச்சியை காண முடியும். சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கையிலேயே நெசவுத் தொழிலுக்கு பெயர் போன இடமாக இன்று மருதமுனை காணப்படுகிறது. இதற்கு காரணம் அவர்களுடைய சுயதொழில் முயற்சியாகும்.

நாவிதன்வெளி பிரதேசம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு கிராமத்தில் உள்ள சகல மக்களும் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அதற்காகவே உங்களுக்கு இந்த சுயதொழில் ஊக்குவிப்பு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுகின்றன.

எனவே இதனை சரியாக பயன்படுத்த வேண்டும். அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்புக்களை வழங்கி முன்னோக்கிச் செல்ல வேண்டும். நாம் நெசவு உற்பத்தியாளர்களுக்கு உதவி திட்டங்கள் வழங்குவது போன்று இன்னும் பல உதவிகளையும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஊடாக தேவையான பயிற்சிகளையும் வழங்கவுள்ளோம். மெழுகுதிரி உற்பத்தி பயிற்சியையும் மூலப்பொருள்களையும் இங்கு வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

சுய தொழில் முயற்சிகளில் ஆர்வம் இருக்கின்றவர்கள் தமது சுய தொழில் முயற்சிகள் ஊடாக தொழில் விருத்தியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இதனையே அரசாங்கமும் எதிர்பார்க்கின்றது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சின் இழப்பீடுகளுக்கான பணிப்பாளர் அனுராதி பெரேரா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கிருபைராஜா திலகராணி, மாவட்ட இழப்பீட்டிற்கான உத்தியோகத்தர் எம்.ஆர். ஆஸாத் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# யாழ் இந்துக் கல்லூரியின் சைக்கிளோட்டப் போட்டி!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியினை முன்னிட்டு இடம்பெற்ற இரண்டாவது சைக்கிளோட்டம் அண்மையில் இடம்பெற்றது.



30 கிலோ மீற்றர் தூரம் கொண்ட சைக்கிளோட்டத்தில் மொத்தமாக

130 மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்களுள் 125 மாணவர்கள் ஓட்டத்தை முழுமையாகப் பூர்த்தி செய்திருந்தனர்.

சிரேஷ்ட பிரிவில் 59 நிமிடங்கள் 27 வினாடிகள் ஓடி அ.சஞ்செய் முதலாம் இடத்தையும், ஒரு மணி 38 வினாடிகள் ஓடி வ.கியாசனன் இரண்டாம் இடத்தையும், ஒரு மணி 43 வினாடிகள் ஓடி ச.செனுஜன் மூன்றாம் இடத்தையும்,

கனிஸ்ட பிரிவில் ஒரு மணி 42 வினாடிகள் ஓடி ச.வேணுமிதன் முதலாம் இடத்தையும், ஒரு மணி 2 நிமிடங்கள் 16 வினாடிகள் ஓடி ச.சசங்கன் இரண்டாம் இடத்தையும், க.பர்வஜன் - ஒரு மணி 2 நிமிடங்கள் 45 வினாடிகள் ஓடி க.பர்வஜன் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (05)

# வெடுக்குநாறியில் வழிபாட்டுரிமையை தடுத்தமைக்கு யாழ். பல்கலை ஊழியர் சங்கம் கண்டன அறிக்கை

தமிழ் மக்களின் மரபுசார் வழிபாட்டிடங்களில் வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயமும் மிக முக்கியமானதொன்றாகும். அவ்ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த மகா சிவராத்திரி தினமன்று பொலிஸார் பூசை வழிபாடுகளை குழப்பியது மட்டுமின்றி பூசை வழிபாடுகளில் ஈடுபட்ட சிவபக்தர்களாகிய பூசகர், சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்டோர் மீது தாக்குதல் மேற்கொண்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றியதோடு அவர்களில் எட்டுப் பேரினை கைதுசெய்து, அவர்கள் மீது தொல்லியல் சட்டத்தின்கீழ் பொய் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தடுப்புக்காவலில் வைத்துள்ள செயலினை நாங்கள்; மிகவன்மையாகக் கண்டிக்கின்றோம்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் மேரும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

இலங்கையின் அரசமைப்பின் கீழ் அடிப்படை உரிமைகளில் ஒன்றான வழிபாட்டுரிமை இலங்கையர் அனைவருக்கும் உள்ளது. அதனடிப்படையில் வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய பக்தர்களின் வழிபாட்டுரிமையை யாரேனும் தடுத்தல் என்பது அடிப்படை உரிமை மீறலாகும்.

தமிழர்களுடைய பாரம்பரிய பண்பாட்டு வழிபாட்டிடங்களினை பௌத்த மதம் சார் தொல்பொருள் சின்னங்களாக அடையாளப்படுத்தி அப்பிரதேசங்களை அரசகட்டமைப்பின் உதவியுடன் பௌத்த சிங்கள பேரினவாதிகள் தொடர்ச்சியாக ஆக்கிரமித்து வருகின்றனர்.

கடந்தவருடம் இதேகாலப்பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட இதே வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தின் விக்கிரகங்கள் அனைத்தும் உடைத்தெறியப்பட்டன.

எனினும்; இனந்தெரியாத நபர்களால் செய்யப்பட்ட குறித்த சம்பவம் தொடர்பில் ஒரு முறையான விசாரணை செய்யப்படவோ அல்லது இதுவரை யாரும் கைது செய்யப்படவோ இல்லை.

ஆனால் சிவராத்திரி தினமன்று தங்களின் மரபுசார் வழிபாட்டிடத்தில் அமைதியான முறையில் வழிபாடுகளை செய்த சைவத் தமிழ்மக்கள் பொய்யான குற்றச்சாட்டில் கைது செய்துள்ளனர். இது எவ்வகையில் நியாயமானது?

அரசாங்கம் தமிழ்மக்களின் பாரம்பரிய இடங்களை சிங்கள பௌத்த மயமாக்கி தமிழ் மக்களின் வழிபாட்டுரிமையினை தடை செய்வதன் மூலம் இவ் இலங்கைத்தீவில் வாழும் தமிழ்மக்கள் மீது பண்பாட்டு மற்றும் கலாசாரம் சார்ந்த கட்டமைக்கப்பட்ட ஒரு பண்பாட்டு இனப்படுகொலையினை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி தவிக்கின்ற போதும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரச கட்டமைப்புக்கள் முன்னிற்கின்றன, அவற்றிற்கு நிதி வழங்குவதில்; அரசு முனைப்புக் காட்டியே வருகின்றது. இதன் மூலம் அனைத்து இலங்கை மக்கள் மீதும் மேலும் பொருளாதாரச் சுமை அதிகரிக்கின்றது.

எனவே இலங்கைத் தீவில் நீடித்து நிலைத்த சுபீட்சமான வாழ்க்கையையும் அமைதியையும் விரும்பும் அனைவரும் இன மத பேதமின்றி ஒன்றுபட்டு இவ்வாறான செயற்பாடுகளை எதிர்க்க வேண்டும். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும் ஏனைய அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இவற்றிற்கு எதிராக போராடுவதோடு, இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது தடுக்க வேண்டும். அத்துடன் பொய்யான குற்றச்சாட்டுக்களில் தடுப்புக்காவலில் உள்ளோர் உடனடியாக விடுவிக்கப்படவும் வேண்டும் என நாங்கள்; அரசினைக் கோரி நிற்கின்றோம். - என்றுள்ளது.

(05)

# கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்தில் 25 சட்டவிரோத வியாபார நிலையங்கள்

கிளிநொச்சி மத்திய பஸ் நிலைய வளாகத்தில் சட்ட விரோதமாக அமைந்துள்ள வியாபார நிலைய கட்டடங்கள் தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

அதன்படி, புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மத்திய பஸ் நிலைய வளாகத்தில் சட்டத்துக்குப் புறம்பாக சுமார் 25 வியாபார நிலைய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன எனத் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

கரைச்சி பிரதேச சபையிடம் ஊடகவியலாளர் ஒருவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக கோரப்பட்ட தகவல்களுக்கு கிடைக்கப்பெற்ற பதில்களிலேயே இந்த சட்ட விரோத வியாபார நிலையங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டடங்கள் அமைக்கப்படுவதாயின் பிரதேச சபையின் கட்டட அனுமதி பெறப்படல் வேண்டும். இது சட்டம். ஆனால், பஸ்நிலையத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள இந்த 25 வியாபார நிலைய கட்டடங்களுக்கும் கட்டட அனுமதி உட்பட எவ்வித அனுமதியும் கரைச்சி பிரதேச சபையிடம் பெறப்படவில்லை; அத்தோடு, வியாபார நிலையங்களுக்குரிய பயனாளிகள் தெரிவு தங்களால் மேற்கொள்ளப்படவில்லை; தங்களிடம் பெயர் பட்டியல்கள் இல்லை எனவும் கரைச்சி பிரதேச சபை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவல்களுக்கு பதில் அளித்துள்ளது.

பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட நகர பகுதியில் சபையினரின் எவ்வித அனுமதியுமின்றி அமைக்கப்பட்டுள்ள இந்த சட்ட விரோத வியாபார நிலையங்கள் தொடர்பில் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.(05)

# வைத்தியர் வேடமணிந்து தங்க நகைகள் திருட்டு

## நிக்கவரெட்டிய வைத்தியசாலையில் துணிகரம்

நிக்கவரெட்டிய வைத்தியசாலையின் சிறுநீரக மருத்துவப் பிரிவுக்கு பரிசோதனைக்காக சென்ற பெண்ணிடம், தன்னை ஒரு வைத்தியர் எனக் கூறிக்கொண்ட நபர் ஒருவர் அந்த பெண்ணின் தங்க நகைகளை அபகரித்து தப்பிச் சென்றுள்ளார் என நிக்கவரெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

நிக்கவரெட்டிய பிரதேசத்தை சேர்ந்த 62 வயதுடைய பெண் ஒருவரின் நகையே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர், பாதிக்கப்பட்ட பெண்ணிடம் தகவல் கோரியுள்ள நிலையில் ஏனைய நோயாளர்களை பார்வையிடுமாறு வைத்தியசாலையில் இருந்த சில பணியாளர்களை அறிவுறுத்திய பின்னர் அந்த பெண்ணை பரிசோதனைக்காக தனியாக அழைத்துச் சென்றுள்ளார்.

இதன்போது சந்தேக நபர் , அந்த பெண்ணிடம் பரிசோதனைக்கு முன்னதாக நகைகளை கழற்றிவிடுமாறு கூறி அவரை ஏமாற்றி நகைகளை திருடி தப்பிச்சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

(05)

# நாட்டில் புகையிலைப் பாவனையினால் தினசரி 50 மரணங்கள் பதிவாகின்றன

நாட்டில்புகையிலைபாவனைகாரணமாகதினசரி 50மரணங்கள்பதிவாகின்றனஎனமதுசாரம்மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய நிறைவேற்று பணிப்பாளர் சம்பத் டி சேரம் தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பின் அறிக்கையை சுட்டிக்காட்டியே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் பதிவாகும் மரணங்களில் 83 சத வீதமானவை தொற்றா நோய் காரணமாக ஏற்படுபவை.

தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான 4 காரணங்களில் புகையிலை பாவனை பிரதான காரணமாகக் காணப்படுகிறது.

இலங்கையர்கள் புகைப்பிடிப்பதற்காக மாத்திரம் தினசரி 520 மில்லியன் ரூபா செலவிடப்படுகிறது.

நாட்டில் சிகரெட் பாவனையாளர்களின் எண்ணிக்கை9.1சதவீதமாககுறைந்துள்ளநிலையில் நாட்டில் உள்ள சிகரெட் பாவனையாளர்களின் மொத்த எண்ணிக்கை 1.5 மில்லியன் ஆகும்.

இந்நிலையை கட்டுப்படுத்தும் நடவடிக்கை தொடர்பில் பல்வேறு முன்மொழிவுகள் சமர்ப்பிக் கப்பட்டும்அவைஇதுவரைநடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றமைமிகவும்கவலைக்குரியவிடயமாகும் என அவர் தெரிவித்தார். (05)

# அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையின் மயக்க மருந்து நிபுணர் வெளிநாடு பறந்தார்

அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் விசேட மயக்க மருந்து நிபுணராகப் பணிபுரியும் பெண் வைத்தியர் திடீரென வெளிநாடு சென்றுள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் அவர் வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு வட்ஸ்அப் மூலம் தெரிவித்துள்ளார் எனத் தெரியவந் துள்ளது.

இந்நிலையில்வைத்தியசாலையின் பணிப்பாளர் இது தொடர்பில் அம்பாந் தோட்டை சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளார் என மேலும் தெரிய வந்துள்ளது. (05)

# சித்திரப் போட்டி சாதனையாளர் தினுக்சனுக்குக் கௌரவம்



(வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை பாடசாலை மாணவர்க ளுக்கிடையிலான சிறுவர் சித்திரப்போட்டியில் சாதனை படைத்த சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலய மாணவன் ரீ.தினுக்சன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

சம்மாந்துறை ஸ்ரீகோரக்கர் தமிழ் மகாவித் தியாலயத்தில்இருந்துமாகாணமட்டத்தில்மூன்றாவது இடத்தைப் பெற்ற ரீ. தினுக்சன் என்ற மாணவனுக்கு அதிபர் எஸ். இளங்கோபன் தலைமையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை நடைபெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர்திருமதிநிதர்சினிமகேந்திரக்குமார் சான்றிதழை வழங்கி வைத்தார்.

நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் எச். நைறூஸ்கான் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ஏ. நசீர், பி. பரமதயாளன், சித்திர பாட வளவாளர் எஸ்.எல். அப்துல் முனாப், பாடசாலையின் அதிபர் எஸ். இளங்கோபன், சித்திரம் பாட ஆசிரியை செல்வி என். லிசாந்தனி ஆகியோரின் முன்னிலையில் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு கல்லூரியில் இடம்பெற்றது. (05)

# சென் ஜோன்ஸ் மாணவன் சென்னை சூப்பர் கிங்ஸில்

## வலைபயிற்சி பந்து வீச்சாளராக இணைவு



யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மாணவன் குகதாஸ் மாதுளன், டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் உள்வாங்கப்பட்டுள்ளார்.

அண்மையில் யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்று முடிந்த வடக்கின் 117 ஆவது பெருஞ்சமரில் இவர் அபாரமாக பந்துவீசி எதிரணி வீரர்களை திணறடித்திருந்தார்.

இவரின் பந்துவீச்சு சமூக ஊடகங் களில் பரவலாக பேசப்பட்டது.

இந்நிலையில் இவரின் பந்து வீச்சு திறமையை அவதானித்த சென்னை சுப்பர் கிங்ஸ் நிர்வாகம் அவரை வலைப்பயிற்சி பந்து வீச்சாளராகத் தெரிவு செய்துள்ளது. (05)

# தொற்றா நோய்கள் குறித்த செயலமர்வு



கிண்ணியாதளவைத்தியசாலையில் கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் தொற்றா நோய்கள் தொடர்பான செயலமர்வு இடம்பெற்றது

இதன் போது கிண்ணியா பிரதேச செயலாளர் ஆர்ஆ கனி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி, கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்தியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிராம சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (05)

# பரு.சித்திவிநாயகர் வித்தியின் நூற்றாண்டு விழா நடைபவனி



யாழ்ப்பாணம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவின் முதலாம் நாள் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திரபாகு தலைமையில் ஆரம்பமானது.



இதன்போது பருத்தித்துறை நகரத்தைச் சுற்றிய நடைபவனியும் இடம்பெற்றது. விருந்தினர்கள்,



பாடசாலை சமூகத்தினர் ஆகியோர் நடைபவனியில் ஈடுபட்டனர். (05)

# சிறுகதை நூல் வெளியீட்டு விழா







எழுத்தாளர் ஜெனீரா ஹய்ருல் அமான் எழுதிய பழனத்து விளைந்த பவளங்கள் எனும் சிறுகதை நூல் வெளியீட்டுவிழா கிண்ணியா பொது நூலக மண்டபத்தி இடம்பெற்றது.

எழுத்தாளர் எஸ்.ஏ.அப்துல் அஸிஸ் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் இனிய பிரதேச செயலாளர் முகம்மது கனி, இனிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ நசுசுகர் கான், பெண்களுக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்டி ஹபிபுல்லா உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# ஆஸ்திரேலியா – இலங்கை மாணவர் கல்வி நிதியம் கிழக்கு – மலையக மாணவர்களுக்கு உதவிக் கரம்

ஆஸ்திரேலியாவிலிருந்து கடந்த 36 வருடங்களாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டுநிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதி அனுசரணையில், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலும் மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்திலும் வதியும் ஆதரவற்ற மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கல் நிகழ்வு







அண்மையில் பாண்டிருப்பிலும் நானுஓயாவிலும் நடைபெற்றது.

கல்வி நிதியத்தின் கிழக்கு மாகாண தொடர்பாளர் அமைப்பான ஆதரவற்ற மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் முன்னாள் அதிபர் ந. கமலநாதனின் தலைமையில் பாண்டிருப்பிலும், மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் அதிபர் அரியமுத்துவின் தலைமையில் நானுஓயாவிலும் நடைபெற்றது.

இலங்கையில் வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதை கல்வி நிதியம் கவனத்தில் கொண்டிருப்பதால், இவ்வாண்டு ( 2024 ) முதல்மாணவர்களுக்கானநிதிக்கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தந்தைமாரை இழந்துவறுமைக்கோட்டின் கீழ் வதியும் தமிழ் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, மாதாந்தம் நான்காயிரம் ரூபா வீதம், முதல் காலாண்டுக்கான நிதிக்கொடுப்பனவுதற்போது வழங்கப்பட்டது.

இந்த நிதி உதவி கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம்,

உள்நாட்டுப்போர் மற்றும் காரணங்களால் தந்தையை இழந்து ஆதரவற்ற நிலையில் தமது பாடசாலைக் கல்வியைத் தொடர சிரமப்படுகின்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு தமது பாடசாலைக்

கல்வியைப் பூரணப்படுத்தும் வரை ( தரம்- 1 முதல் க.பொ.த உயர்தரம் வரை ) தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் பதிமூன்றாவது வருடமாகத் தொடரும் இந்நிகழ்வில் இவ்வாண்டின் முதற் காலாண்டுக்கான நிதி உதவியை பதினேழு பாடசாலைமாணவர்களுடன் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி மாணவியும் பெற்றுக் கொண்டார்.

மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்நிதியுதவியை கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் பெற்றுவருகின்றனர்.

ஆஸ்திரேலியாவில் வதியும் தமிழ் அன்பர்களின்ஆதரவுடன்இயங்கும்இலங்கை மாணவர் கல்வி நிதியம், வடக்கு, கிழக்கு, மேற்கிலங்கை உட்பட மலையக மாணவர்கள் பலருக்கும் கடந்த 36 வருடங்களாக உதவி வருகின்றது என்பது குறிப்பிடத்தகுந்தது.

கடந்த காலங்களில் இந்நிதியத்தின் உதவி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள், பல்கலைக்கழக கல்வி உட்பட உயர்கல்வியை தொடர்ந்து தொழில் வாய்ப்புகளையும் பெற்றுள்ளனர். (05)

# இந்திய துணை தூதரகம் முன் உணவு தவிர்ப்புப் போராட்டம்

## மீனவ சங்கங்கள் கூட்டாக அறிவிப்பு




இந்தியஅத்துமீறியமீன்பிடியைகட்டுப்படுத்துமாறு கோரி யாழ்.இந்திய துணை தூதரகம் முன் மீனவ சங்கங்கள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளன.

யாழ் மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது யாழ்.மாவட்ட கடத்தொழிலாளர் கிராமிய அமைப்புகளின் தலைவர் செல்லத்துரை நற்குணம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்.மாவட்ட கடற்பரப்பில் இந்திய அத்துமீறிய மீன்பிடியாளர்களின் வருகை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

அவர்கள் எமது வாழ்வாதாரத்தையும் தொழிலையும் தொடர்ச்சியாக அழித்து வரும் நிலையில் இலங்கை அரசாங்கத்திடமும் இந்திய அரசாங்கத்திடமும் எமது ஆதங்கங்களை வெளிப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

அண்மையில் இந்திய சட்டவிரோத மீன்பிடியாளர்களைக் கட்டுப்படுத்துமாறு கோரி இலங்கை கடல் எல்லையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினோம். யாழ் இந்தியத் துணைத் தூதரகத்திடம் மஜகர் கையளித்தோம் பயன் ஏதும் ஏற்படவில்லை.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திற்கு முன்னாள் தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளோம்.

எமது போராட்டத்திற்கு ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த சங்கங்கள் சமாசங்கள் மற்றும் சம்மேளனங்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# மொடலிங் துறையில் இணைப்பதாக இளம் பெண்களிடம் ஏமாற்று வேலை

## சந்தேகநபர் ஒருவர் கைது

கண்டி - இராஜவெல்ல பகுதியில் ,மொடலிங் துறைக்கு பெண்களை இணைத்துக் கொள்வதாகத் தனது முகநூல் பக்கத்தில் விளம்பரம் செய்த சந்தேக நபர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் 15 பெண்கள்பொலிஸ்நிலையத்தில்செய்த முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு வியாழக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

சந்தேகநபர் தன்னை ஒரு வைத்தியராகக்காட்டிக்கொண்டுஇளம் பெண்களை மொடலிங் துறைக்கு வேலைக்குச் சேர்த்துக் கொள்வதாகக் கூறி, அவர்களின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளைச் சேகரித்து நேர்காணலுக்குப் பரிந்துரைத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர் குறித்த பெண்களின் நிர்வாண புகைப்படங்களை எடுத்து, அச்சுறுத்தியுள்ளார் என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

(05)

# பெறுமதியான பலா மரப்பலகைகளை அனுமதியின்றி ஏற்றிச்சென்ற லொறி

## அரசியல்வாதி உட்பட மூவர் கைது

கொக்மாதுவ அதிகவேக நெடுஞ்சாலையில் அனுமதிப்பத்திரம் இன்றிசட்டவிரோதமாகபெறுமதியான பலா மரப்பலகைகளை ஏற்றிச்சென்ற லொறியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அரசியல்வாதி ஒருவர் உட்பட மூவர் கைது செய்ய பட்டுள்ளனர்.

இந்த மரப்பலகைகள் சிரிமவுன் வத்த பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான காணியிலிருந்து வெட்ட பட்டதாக சந்தேகிக்கும் பொலிஸார் இது தொடர்பிலான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அரசுக்கு சொந்தமான காணிகளுக்குள் அத்துமீறி நுழைந்த சிலர் அங்குள்ள சொத்துக்களை சேதப்படுத்துவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த போது சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கொக்மாதுவ அதிகவேக நெடுஞ்சாலையில் மரப்பலகைகளை ஏற்றிச்செல்லும் லொறி ஒன்று பயணிப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.03.2024இல் வெளியிடப்பெற்றது.